செ.வெ. எண்: 460 நாள்: 03–08–2012

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

கிராம மக்களை பொது விநியோகத்திட்டத்தின் செயல்பாட்டில் ஈடுபடுத்தவும், பொது விநியோகத்திட்டத்தின் செயல்பாட்டை மேம்படுத்தவும் நியாயவிலை அங்காடிகளின் பதிவுகள் ஆண்டுக்கு இரு முறை அதாவது ஜனவரி 26ம் தேதி மற்றும் ஆகஸ்ட் 15ம் தேதிகளில் நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் சமூகத் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஆகஸ்ட் 15ம் தேதி அன்று நடைபெற உள்ள கிராம சபை கூட்டத்தில் நியாயவிலை அங்காடிகளின் பதிவுகள் சமூகத் தணிக்கைக்கு உட்படுத்தப்படவிருக்கின்றன.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை நியாயவிலை அங்காடிக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படுவதையும், போதிய அளவு அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலை அங்காடியில் இருப்பு வைக்கப்படுவதையும், குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்கள் குடும்ப அட்டைக்கு தகுதியான முழு அளவு அத்தியாவசியப் பொருள்கள் நல்ல தரத்துடன் சரியான எடையில் / அளவில் வழங்கப்படுவதை உறுதி செய்வதும் அரசின் தலையாய பணியாகும். தற்போது நடைமுறையிலுள்ள அலுவலர்கள் மூலமான கண்காணிப்பு முறை பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டினை பெரிதும் மேம்படுத்த உதவுகின்ற போதிலும் பொது மக்களின் பங்களிப்பு இருந்தால் தான் பொது விநியோகத்திட்டத்தின் உண்மையான பலன்கள் பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்ய முடியும் என அரசு கருதுகிறது. எனவே எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி தங்கள் கிராம பகுதியில் நடைபெற உள்ள கிராம சபை கூட்டத்தில் மக்கள் அதிக அளவில் கலந்து கொண்டு நியாய விலை அங்காடியின் பதிவேடுகள் சமூக தணிக்கைக்கு வைக்கப்படும்போது நியாய விலை அங்காடியில் தரமான

அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றனவா என்பது குறித்தும், அத்தியாவசியப் பொருள்கள் எடை / அளவு குறைவின்றி வழங்கப்படுகின்றதா என்பது குறித்தும், நியாயவிலை அங்காடி பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பொது மக்களிடம் கனிவுடன் நடந்து கொள்கின்றனரா என்பது குறித்தும், குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலை அங்காடியில் நீண்ட நேரம் காத்திருக்காத வண்ணம் அவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் விரைந்து வழங்கப்படுகின்றதா என்பது குறித்தும், உண்மையான அட்டைதாரர்களுக்கு உரிய நேரத்தில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றதா என்பது குறித்தும், போலி பட்டியலிடுதல், எடை/ அளவு குறைவாக அத்தியாவசியப் பொருள்கள் வழங்குதல், பொது விநியோகத்திட்ட பொருள்களை கள்ளச் சந்தைக்கு அனுப்புதல் போன்ற முறைகேடுகள் நடைபெறுகின்றதா என்பது குறித்தும் கடைக்கு தொடர்புடைய பகுதிகளின் பொது மக்கள் கிராம சபை கூட்டத்தில் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க அரசு ஆணையின்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதன் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**